# கோறளைப்பற்று பிரதேசசபையின் அறவிடப்பட முடியாத வருமானத்தை வெட்டி நீக்குதல் தொடர்பான உள்ளகக் கொள்கைப் பிரமாணம்

Scanned with AnyScanner

## கோறளைப்பற்று பிரதேசசபையின்
## அறவிடப்பட முடியாத வருமானத்தை வெட்டி நீக்குதல்
## தொடர்பான உள்ளகக் கொள்கைப் பிரமாணம்

பிரதேசசபைச் சட்டத்தின் 1987, 15ம் இலக்க பிரிவு 158(2) மற்றும் 182 வது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய பிரிவிற்கமைவாக கோறளைப்பற்று பிரதேசசபையின் ஆள்புல எல்லைக்குள் அறவிடப்பட முடியாத வருமானத்தை வெட்டி நீக்குவதற்கான உள்ளகக் கொள்கைப் பிரமாணம் கீழ்வருமாறு வரையறுக்கப்படுகின்றது.

1. கோறளைப்பற்று பிரதேசசபையின் ஆள்புல எல்லைக்குட்பட்ட சகல வருமானங்களையும், அதன் நிலுவைகளையும் அறவிடுவதற்கான தீர்வு வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கு கோறளைப்பற்று பிரதேசசபையின் செயலாளர் பூரண அதிகாரம் பெற்றவராகப் பிரகடனப்படுத்தப்படுகின்றார்.

2. கீழ்க் குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் வருமானத்தை வெட்டி நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கு கோறளைப்பற்று பிரதேசசபையின் செயலாளர் பூரண அதிகாரம் பெற்று விளங்குகின்றார்.

   (அ). வெட்டி நீக்கப்படும் தொகை புறக்கணிக்கத்தக்கதாக இருக்கும் போது (அறவிடுவதற்கு செல்லும் போது சபைக்கு ஏற்படும் செலவு, அறவிடப்பட வேண்டிய தொகையை விட அதிகமாக அல்லது ஒப்பீட்டளவில் அதிக மதிப்பை கொண்டுள்ள போது)

   (ஆ). அத்தொகையை அறவிடமுடியாத சந்தர்ப்பமொன்றின் போது

   (இ). அத்தொகையைச் செலுத்த வேண்டிய நபரின் வறுமை அடிப்படையில்

3. குறிப்பிட்ட ஒரு தவணைக்கு சம்பந்தப்பட்ட மதிப்பீட்டு வரி செலுத்தப்படாத போது, அத்தவணை முடிவடைந்தவுடன் மதிப்பீட்டு வரி செலுத்த வேண்டிய நபரிடமுள்ள அசையும் சொத்துக்களை முடக்கி விற்பனை செய்து நிலுவை மதிப்பீட்டு வரி அறவிடுவதற்காக கோறளைப்பற்று பிரதேசசபையின் செயலாளரினால் சபையில் வருமானப் பரிசோதகருக்கு ஆணைப்பத்திரமொன்று வழங்கப்பட வேண்டும்.

Scanned with AnyScanner

4. அபிவிருத்தி செய்யப்படாத காணிக்கான வரி மற்றும் கடை வாடகைக்கான நிலுவைத் தொகையும் இவ்வகையிலேயே அறவிடப்பட வேண்டும். தொழில் வரி, வியாபார வரி, சில காணிகளை விற்பனை செய்வதன் அடிப்படையிலான வரி மற்றும் கேலிக்கை வரி ஆகியன நிலுவையிலுள்ள போது, சம்பந்தப்பட்ட நிலுவையை அறவிடுவதற்காக உடனடியாக மெஜிஸ்ட்ரேட் அவர்களுக்கு கோரிக்கையொன்றை வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பு கோறளைப்பற்று பிரதேசசபையின் செயலாளருக்கு கையளிக்கப்படுகின்றது.

5. இவ்வழிமுறைகளை பின்பற்றாத போது, அவ்வருமானத்தை அறவிடமுடியாத வருமானமாகக் கவனத்தில் கொள்ள முடியாது.

6. கீழ்க் குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் நிலுவை வருமானத்தை வெட்டி நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கு கோறளைப்பற்று பிரதேசசபையின் செயலாளர் பூரண அதிகாரம் பெற்று விளங்குகின்றார்.

(அ). கைவிடப்படும் தொகை புறக்கணிக்கத்தக்க ஒன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தில் சொத்துக்களை முடக்குவதற்கு அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஏற்படும் செலவு, அறவிடப்படவேண்டிய தொகையைவிட அதிகமாகும் போது அல்லது தோராயமாக சமமாக இருக்குமானால் அத்தொகையை புறக்கணிக்கத்தக்க தொகை ஒன்றாக கவனத்தில் கொள்ளமுடியும். இவ்விடயத்தில் வாகனம் மற்றும் விலங்குகள் தொடர்பான வரிகளில் நிலுவைகளை அறவிடுவதற்கு செயற்பாடுகளை மேற்கொள்வதை உதாரணமாக காட்ட முடியும்.

(ஆ). சம்பந்தப்பட்ட தொகையை அறவிடமுடியாதென கவனத்தில் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள்

- சபைக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்துவதற்கு நியமிக்கப்பட்ட திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் சபைக்கு செலுத்தாவிட்டால், சந்தர்ப்பத்திற்கேற்ப அசையும் சொத்துக்களை முடக்குதல் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பித்ததன் பின்னர் நிலுவை தொகை அறவிடப்பட வேண்டும். அவ்வழிமுறைகளை மேற்கொண்டதன் பின்னரும் நிலுவை தொகையை அறவிடமுடியாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் அத்தொகையை அறவிடமுடியாத தொகையாக கவனத்தில் கொள்ள முடியும்.

Scanned with AnyScanner

b. சம்பந்தப்பட்ட தொகையை செலுத்த வேண்டிய நபர், சபைக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தும் அளவிற்கு வருமானம் இல்லாதவரென அவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும். (அத்தொகையை செலுத்துமாறு கோரப்படும் சந்தர்ப்பத்தில்)

c. கோறளைப்பற்று பிரதேசசபையின் செயலாளர் சம்பந்தப்பட்ட நபர் வசிக்கும் பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடமிருந்து அவரின் வருமான நிலை தொடர்பான அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இத்தொகையை செலுத்துவதற்கு போதுமான அளவு வருமானம் இல்லாதவரென உறுதி செய்யும் அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும்.

d. இதற்கு மேலதிகமாக கோறளைப்பற்று பிரதேசசபையின் வருமானப் பரிசோதகர் மூலமும் அது தொடர்பான பரிந்துரை அறிக்கையொன்று பெற்றுக்கொள்ள வேண்டும்.

7. கீழ்க்குறிப்பிடப்படும் நிதி அளவுக்கு குறைவான சந்தர்ப்பமொன்றில் கோறளைப்பற்று பிரதேசசபையினால் எடுக்கப்படும் சபைத் தீர்மானத்தின் கீழ் அவ்வருமானத்தை வெட்டி நீக்குதல் மற்றும் கீழ்க்குறிப்பிடப்படும் நிதி அளவுக்கு அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் சபையினால் நிறைவேற்றப்படும் பிரேரணையில் விடய அமைச்சருக்கு செய்யப்படும் கோரிக்கைக்கு அமைவாக, அமைச்சரின் ஒப்புதலுக்கு அமைய அவ்வருமானத்தை வெட்டி நீக்குவதற்கு பிரதேசசபைச் சட்டத்தின் 1987, 15ம் இலக்க பிரிவு 158(2) மற்றும் 182 வது பிரிவுகளின் அடிப்படையில் கோறளைப்பற்று பிரதேசசபைக்கு அதிகாரம் உள்ளது.

| நிறுவன வகை | வருமான ஆதாரம் | நிதி வரம்பு | |
|---|---|---|---|
| | | சபை தீர்மானம் | அமைச்சர் |
| பிரதேசசபை | வேறு வருமானங்கள் | ரூ. 50.00 | ரூ. 50.00 க்கு மேல் |
| | மதிப்பீட்டு வரி | நிதி வரம்பு இல்லை | பொருத்தமற்றது |

(இ). தொகையை செலுத்த வேண்டிய நபர் வறுமையில் இருப்பதாக கவனத்தில் கொள்ளும் சந்தர்ப்பமொன்றில்

i. சபைக்கு செலுத்த வேண்டிய ஒரு தொகையை செலுத்துமாறு சபையினால் கோரப்படும் ஒரு சந்தர்ப்பத்தில், அத்தொகையை செலுத்த வேண்டிய நபர் அதை செலுத்த முடியாதவாறு வறுமையில் இருக்கக்கூடும். அத்தொகையை செலுத்த முடியாதவாறு வறுமையில் அவர் இல்லாதிருந்தால் அதை அறவிடுவது தொடர்பாக கோறளைப்பற்று பிரதேசசபையின் செயலாளர் செயற்பட்டிருக்காவிட்டால் அதன் பின்னர் அவர் வறுமை நிலைக்கு உட்பட்ட நபராக மாறியிருந்ததன் காரணமாக வருமானத்தை வெட்டி நீக்குவதற்கு அனுமதியை கோருவதற்கு கோறளைப்பற்று பிரதேசசபையின் செயலாளருக்கு முடியாது.

ii. சபைக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்துமாறு கோரப்படும் சந்தர்ப்பத்திலேயே அவர் வறுமை நிலைக்கு உட்பட்டிருந்தால் மாத்திரம் அத்தொகையை வெட்டி நீக்குவதை கவனத்தில் கொள்ள முடியும்.

iii. அதற்கமைய முதலில் அத்தொகையை அறவிடுவதற்கான வழிமுறைகள் மற்றும் அறவிட முடியாததற்கான காரணங்கள் கோறளைப்பற்று பிரதேசசபைக்கு தெளிவுப்படுத்த வேண்டும்.

iv. அதன் பின்னர் கீழ்க் குறிப்பிட்டுள்ள விடயங்களை முழுமைப்படுத்திய பின்னர் மாத்திரம் சம்பந்தப்பட்ட தொகையை வெட்டி நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கோறளைப்பற்று பிரதேசசபையின் செயலாளருக்கு முடியும்.

a. சம்பந்தப்பட்ட தொகையை செலுத்த வேண்டிய நபர் வறுமையில் இருப்பவராக இருந்தால், அதை செலுத்துவதிலிருந்து அவரை விடுவிக்குமாறு அந்நபர் செய்யப்பட்ட கோரிக்கையொன்றை கோறளைப்பற்று பிரதேசசபையின் செயலாளருக்கு சமர்ப்பித்திருக்க வேண்டும். (சொத்தை முடக்குவதற்கு செல்லும் சந்தர்ப்பத்தில் அவ்வாறான கோரிக்கையொன்றை செய்தால், அத்தொகையை செலுத்துமாறு கோரப்பட்ட சந்தர்ப்பத்திலும் அவர் வறுமை நிலைக்கு உட்பட்டிருந்த நபராக இருந்தால் மட்டுமே, அக்கோரிக்கை கவனத்தில் கொள்ளப்படும்.)

Scanned with AnyScanner

8. இச்செயற்பாட்டிற்கு கோறளைப்பற்று பிரதேசசபையுடன் பின்வருவோர் பங்குதாரர்களாகக் கடமையாற்றுவர்

(அ) சபைக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாத நபர் முதன்மைப் பங்குதாரராவார்.

(ஆ) தகவல் அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்காக அடையாளம் காணப்படும் நபராக சபையின் சம்பந்தப்பட்ட விடயம் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர், வருமானப் பரிசோதகர், நிதி உதவியாளர் ஆகியோர் இருப்பர்.

(இ) தகவல்களை உறுதி செய்வதற்காக தொடர்புபடுத்திக் கொள்ளப்படும் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் அவர்கள்.

(ஈ) வருமானத்தை வெட்டி நீக்குவதற்காக பரிந்துரைகளை சமர்ப்பிக்க வேண்டிய சபையின் வருமானப் பரிசோதகர், செயலாளர் மற்றும் நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் குழுவும்

(உ) வருமானத்தை வெட்டி நீக்குவதற்கான அனுமதியை வழங்கும் பொது சபை அல்லது விடய அமைச்சர்.

9. கோறளைப்பற்று பிரதேசசபைக்கு செலுத்த வேண்டிய எந்தவொரு வருமானத்தையும் வெட்டி நீக்குவதற்குப் பரிந்துரைப்பதற்கு மற்றும் அனுமதி வழங்குவதற்கு முன்னர் கீழ்க் குறிப்பிட்டுள்ள விடயங்களை உறுதி செய்யும் அறிக்கைகளை எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(அ). கோறளைப்பற்று பிரதேசசபையின் செயலாளரினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் வருமான ஆதாரம், தலைப்பு, பணம் செலுத்த வேண்டிய நபர், நிலுவை ஆரம்பித்த திகதி மற்றும் நிலுவை தொகையை காட்டும் அறிக்கை.

(ஆ). வெட்டி நீக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ள வருமானம் நிலுவையாக ஆரம்பித்தவுடன் அந்நிலுவையை அறவிடுவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட சட்ட மற்றும் வேறு வழிமுறைகளைத் தெளிவுப்படுத்தும் அறிக்கை.

Scanned with AnyScanner

(இ). நிலுவையை அறவிடுவதற்காக சட்ட மற்றும் வேறு வழிமுறைகளை மேற்கொண்டதன் பின்னரும் நிலுவை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதி இருக்குமானால் அதற்கு காரணமான விடயங்கள்

(ஈ). நிலுவை தொகையை அறவிடுவதற்கு ஏற்கப்படும் செலவுகள், சம்பந்தப்பட்ட தொகையை விட அதிகமானால், அச்செலவுகளை கணக்கிடும் அறிக்கை.

(உ). சம்பந்தப்பட்ட நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு முடியாத நிலை இருக்குமானால், அவ்வாறு ஏற்படுவதற்கான காரணங்களை தெளிவுப்படுத்தும் அறிக்கை

(ஊ). சம்பந்தப்பட்ட தொகையை செலுத்த வேண்டிய நபர் வறுமையில் இருப்பவரென அடையாளம் காணப்படும் சந்தர்ப்பமொன்றில் -

i. அந்நபரின் வருமானம் தொடர்பாக பிரிவின் கிராம உத்தியோகத்தர் மூலம் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட அறிக்கை மற்றும்

ii. அந்நபர் சமுர்த்திப் பயனாளியாக இருந்தால், அதை உறுதி செய்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட அறிக்கை

10. ஏதாவதொரு வருமானத்தை வெட்டி நீக்குவதற்கு முன்மொழிவதற்கான காரணங்களைக் கவனத்திற் கொண்டு தவிசாளரினால் நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

11. பணத்தை செலுத்த வேண்டிய நபரின் வறுமை காரணமாக அவ்வருமானத்தை வெட்டி நீக்குவதானால், மேற்குறிப்பிட்ட அறிக்கைகளைத் தயாரிக்கும் திகதியிலுள்ள நிலுவைத். தொகையை மாத்திரம் வெட்டி நீக்குவதற்கும் அவ்வருமானம் மேலும் திரட்டலுக்கு உட்படுமானால் அத்திகதிக்கு பின்னர் மேலும் அவ்வருமானம் திரட்டப்பட வேண்டுமென்பதாக வேறு காரணங்களின் அடிப்படையில் வெட்டி நீக்கப்படும் வருவாயாக இருக்குமானால் சம்பந்தப்பட்ட நிலுவையை வெட்டி நீக்குவதற்காக நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் குழுவினால் பொது சபைக்கு பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

Scanned with AnyScanner

12. வெட்டி நீக்குவதற்காக முன்மொழியப்பட்டுள்ள வருமானம் மதிப்பீட்டு வரியாக இருக்கும் போது, அவ்வருமானத்தை வெட்டி நீக்குவதற்குப் பொது சபையின் பிரேரணை நிறைவேற்றத்தின் மூலம் ஒப்புதலை வழங்குவதற்கும், வெட்டி நீக்குவதற்கு முன்மொழியப்பட்ட வருவாய் வேறு வருவாயாக இருக்குமானால் வெட்டி நீக்கப்படும் தொகையின் பெறுமதி ரூ. 50.00 அல்லது அதற்கு குறைவாக இருந்தால் அவ்வருமானத்தை வெட்டி நீக்குவதற்கு பொது சபையின் பிரேரணை நிறைவேற்றத்தில் ஒப்புதலை வழங்குவதற்கும், மேற்குறிப்பிட்ட (07) நிதி வரம்பை மீறியிருக்கும் போது, அவ்வருமானத்தை வெட்டி நீக்குவதற்கு பொதுச் சபையின் பிரேரணை நிறைவேற்றத்தின் மூலம் அமைச்சரின் அனுமதியை கோருவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு கோறளைப்பற்று பிரதேசசபையின் செயலாளருக்கு பூரண அதிகாரம் வழங்கப்படுகின்றது.

13. விடய அமைச்சரின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டிய பொது சபைப் பரிந்துரையை உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக விடய அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும்.

14. இந்த கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் பூரண அதிகாரம் கோறளைப்பற்று பிரதேசசபையின் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு உண்டு.

15. இலங்கை ஜனநாயக சோஸலிஷக் குடியரசின் அரசியலமைப்பு, பிரதேசசபைச்சட்டம் மற்றும் நிதி ஒழுங்கு விதிகள் என்பவற்றை விஞ்சும் வகையில் இக்கொள்கைப் பிரகடனம் எச்சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தப்பட முடியாது.

MR.S.NAVANEETHAN
Secretary (Acting)
Koralaipattu Pradeshiya Sabha
Valaichenai

Scanned with AnyScanner